# முயற்சியாண்மைக்கல்வி

**06**

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## வணிக அமைப்புக்கள்

## தரம் 11

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

**(1)**

**கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1. பொதுவானதொரு இலக்கை அடைய ஒன்றுபடும் மக்கள் குழு
   1) வணிகம்
   2) நிறுவனங்கள்
   3) வர்த்தக நிறுவனங்கள்
   4) பங்குடமை

2. மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் பொருட்டு வரையறுக்கப்பட்ட வளங்களை உபயோகித்து இலாபம் உழைத்தல், சமூக நலன்கள் அல்லது பிறிதொரு நோக்கத்தை அடைந்து கொள்வதற்காகப் பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்தல்,
   1) வர்த்தகமாகும்
   2) பொதுக் கம்பனிகள் ஆகும்
   3) வணிக அமைப்புக்களாகும்
   4) வியாபாரமாகும்

3. ஒரு வணிக அமைப்பினால் எப்போதும் வாடிக்கையாளருக்கு வழங்கப்படுவது
   1) பொருட்கள்
   2) சேவைகள்
   3) உற்பத்தி
   4) பொருட்கள் மற்றும் உற்பத்தி

4. வணிக அமைப்பின் பொதுவான அம்சம்
   1) பொதுவான இலக்கு
   2) இலாபம் ஈட்டுதல்
   3) சேவைகளை வழங்குதல்
   4) பொருட்களை உற்பத்தி செய்தல்

5. வணிக அமைப்பினால் நிறைவேற்றப்படுவது,
   1) தேவைகள்
   2) விருப்பங்கள்
   3) சேவைகள் மற்றும் தேவைகள்
   4) பொருட்கள் மற்றும் சேவைகள்

6. அனைத்து வணிக நிறுவனங்களுக்கும் பொதுவான பண்பாக கருதப்படாதது,
   1) வரையறுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்தல்.
   2) பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
   3) பொதுவான நோக்கத்தைக் கொண்டிருத்தல்
   4) உற்பத்தி மற்றும் விநியோகம்

7. மனித தேவைகளை மற்றும் விருப்பங்களைப் பூரத்தி செய்ய வணிக நிறுவனங்களால் வழங்கப்படுவது,
   1) பொருட்கள் மற்றும் சேவைகள்
   2) உணவு மற்றும் உடை

3) வங்கி மற்றும் காப்புறுதிச் சேவைகள் 4) பொருட்கள்

8. வணிக அமைப்புக்களை வகைப்படுத்த பயன்படுத்தப்படும் நியதிகளாக கருதப்படுவது,

1) அரச மற்றும் தனியார் 2) உரிமை மற்றும் நோக்கம்
3) வங்கி மற்றும் காப்புறுதிச் சேவைகள் 4) பொது மற்றும் தனியார்

9. வணிக அமைப்புக்களை வகைப்படுத்துவதற்கான முக்கிய நியதிகள்,

1) இரண்டு 2) மூன்று
3) நான்கு 4) ஐந்து

10. தனியாக அல்லது தனிநபர் குழுவினால் நிதி முதலீடு செய்யும் போது அவ்வணிகத்தின் உரிமை,

1) அரச துறைக்குச் சொந்தமானது 2) பொதுத் துறைக்கு சொந்தமானது
3) தனியார் துறைக்கு சொந்தமானது 4) திணைக்களத்திற்கு சொந்தமானது

11. தனியார் துறை வணிகங்களை மட்டும் உள்ளடக்கியது,

1) தனி உரிமை, அரச கம்பனிகள் 2) அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனங்கள்
3) பங்குடமை, அரச கூட்டுத்தாபனம் 4) தனியார் கம்பனி, அங்கீகார வணிகம்

12. தனியார் துறை வணிகங்களாக கருதப்படுவது,

1) தனியுடமை, கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
2) அங்கீகார வணிகம், பங்குடமை
3) அரச கம்பனி, திணைக்களம்
4) பங்குடமை, கூட்டிணைக்கப்பட்ட கம்பனி

13. பொதுத்துறை வணிக அமைப்பையும் மற்றும் தனியார் துறை வணிக அமைப்பையும் முறையே காட்டும் விடை,

1) அங்கீகார வணிகம், அரச கம்பனி
2) அரச கூட்டுத்தாபனம், தனியார் கம்பனி
3) அரச கூட்டுத்தாபனம், அரச கம்பனி
4) தனியுடமை, கூட்டிணைக்கப்பட்ட கம்பனி

14. நோக்கத்தின்படி வணிக அமைப்புக்களை வகைப்படுத்தும் போது,

1) துனியார் மற்றும் பொதுத்துறை வணிகங்கள்
2) குறுகிய கால இலக்குகள் மற்றும் நீண்ட கால இலக்குகளைக் கொண்ட வணிகங்கள்
3) பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள்
4) இலாப நோக்கம் மற்றும் இலாப நோக்கற்ற வணிகங்கள்

15. அரசினால் மூலதனம் இடப்படும் வணிகம்

1) நிமல் ஸ்டோர்ஸ் 2) புகையிரத திணைக்களம்
3) வரையறுக்கப்பட் ஆலோக பொது கம்பனி 4) மெக்டொனால்ஸ்

16. தனியார் துறைக்கு சொந்தமான வணிக நிறுவனம்

1) வரையறுக்கப்பட் தினுக (தனியார்) கம்பனி 2) தபால் திணைக்களம்
3) கூட்டுறவு மொத்த விற்பனைக் 4) அரச மருந்தக கூட்டுத்தாபனம்



COMMERCE & BUSINESS STUDIES BRANCH

கூட்டுத்தாபனம்

17. இலாப நோக்குடைய அமைப்பாக கருதப்படாதது,

1) லங்கா ஹொஸ்பிடல்
2) சம்பத் வங்கி
3) யுனிசெலா கார்மென்ட்ஸ்
4) செஞ்சிலுவைச் சங்கம்

18. கிரயத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் சமூக நலன்களில் அக்கறை காட்டும் வணிகம்,

1) தனியார் துறை வணிகம்
2) இலாப நோக்குள்ள வணிகம்
3) இலாப நோக்கற்ற வணிகம்
4) பல்பொருள் அங்காடி

19. இலாப நோக்குள்ள வணிக அமைப்பாக அமைவது,

1) காகில்ஸ் ∴புட் சிட்டி
2) செஞ்சிலுவைச் சங்கம்
3) சவிய விளையாட்டு சங்கம்
4) லயன்ஸ்கிலப்

20. இலாப நோக்கற்ற வணிக அமைப்பாக அமைவது,

1) இலங்கை வங்கி
2) சர்வோதய
3) பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலை
4) கீல்ஸ் சிறப்புச்சந்தை

21. முயற்சியாளர் ஒருவருக்கு சிறிய அளவு மூலதனத்துடன் எளிதாக ஆரம்பிக்கக்கூடிய வணிக அமைப்பின் வகை,

1) பங்குடமை
2) தனியுடமை
3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
4) அங்கீகார வணிகம்

22. தனியுடமை வணிகத்தின் பண்பாக அமைவது,

1) வரையறுக்கப்பட்ட பொறுப்பு
2) தொடர்ந்தியங்கும் தன்மை
3) பதிவு கட்டாயமில்லை
4) பங்குகளை வழங்கி மூலதனம் சேகரித்தல்

23. தனியுடமை வணிகத்திற்கு வணிகத்தின் பெயரில் வங்கிக் கடனை பெற முடியாமல் இருப்பது,

1) பொறுப்பு வரையறுக்கப்படாமை
2) சட்ட ஆளுமை இல்லாமை
3) தொடர்ந்தியங்கும் தன்மை காணப்படாமை
4) உரிமை தனியாரை சார்ந்து காணப்படல்

24. தனியுரிமை வணிகத்திற்கு வணிகப்பெயரைப் பதிவு செய்ய வலியுறுத்துவது,

1) 1890 பங்குடமை கட்டளை சட்டம்
2) 2007ஆம் ஆண்டு 07 இலக்க கம்பனி சட்டம்
3) 1918 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்க வணிகப் பெயர் கட்டளைச் சட்டம்
4) 1840 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க மோசடி தலிர்ப்புச் சட்டம்

25. தனியுரிமை வணிகத்தில் பொறுப்புக்களை தீர்க்கம் போது உரிமையாளரின் தனிப்பட்ட சொத்து கூட வணிகத்திற்கு இழக்க நேரிடும் என்பதால் கருதப்படுவது,

1) தொடர்ந்தியங்கும் தன்மை காணப்படாமை
2) பதிவு கட்டாயமில்லை
3) சட்ட ஆளுமை இல்லாமை
4) வரையறையற்ற நட்ட பொறுப்பு

26. தனி உரிமை வணிகத்தின் வணிகப் பெயரை பதிவு செய்த பின் வழங்கப்படும் சான்றிதழ்


COMMERCE & BUSINESS STUDIES BRANCH

1) வணிகப் பெயர் பதிவுச் சான்றிதழ்
2) கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழ்
3) வர்த்தகச் சான்றிதழ்
4) வணிக பதிவுச் சான்றிதழ்

27. தனியுடமை வணிகத்தினை பதிவு செய்வதற்கான அதிகாரம் பெற்ற நபர்,
1) கிராம உத்தியோகத்தர்
2) பிரதேச செயலாளர்
3) மாவட்ட செயலாளர்
4) கம்பனி பதிவாளர்

28. தனியுரிமை வணிகத்தின் நன்மை.

1) அனைத்து இலாபங்களும் உரிமையாளருக்கு சொந்தமானது
2) முறையான மற்றும் உயர் அங்கீகாரம் காணப்படல்
3) கூட்டு முடிவுகளை எடுக்கும் திறன்
4) தொடர்ந்தியங்கும் தன்மை

29. தனியுரிமை வணிகத்தில் விருப்பப்படி செய்ய முடியாதது,

1) பணியாளர்கள் ஆட்சேர்ப்பு
2) ஊழியர்களை பணிநீக்கம் செய்தல்
3) வணிக நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல்
4) வணிகத்தின் பெயரில் வங்கிக் கடன் வாங்குதல்

30. தனியுரிமை வணிகத்தின் தீமை

1) வணிகத் தகவலின் இரகசியத் தன்மையை பாதுகாத்தல்
2) தொடர்ந்தியங்கும் தன்மை காணப்படாமை
3) குடும்ப உறுப்பினர்களிடமிருந்து உதவி பெற்றுக் கொள்ள முடிதல்
4) வணிகமொன்றை இகுவாக ஆரம்பிக்க முடிதல்.

31. தனியுரிமை வணிகத்திற்கு தடையாக அமையாதது,

1) தனியாக எடுக்கும் முடிவுகள் சில நேரங்களில் தோல்வியடையும்.
2) பொறுப்பு வரையறையற்றது.
3) தொடர்ச்சியின்மை
4) ஒரு தொழிலைத் தொங்குவது இலகு.

32. இலாப நோக்குடன் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு இடையே காணப்படும் ஒப்பந்தம்,

1) தனியுடமை
2) பங்குடமை
3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
4) அங்கீகார வணிகம்

33. பங்குடமை வணிகமாக வணிகத்தை நடாத்தும் வணிகமாக கருதப்படாதது,

1) கணக்காளர் மற்றும் வழக்கறிஞர்
2) வரி மற்றும் மருத்துவம்
3) பொருட்கள் மற்றும் வர்த்தகம்
4) வங்கி மற்றும் காப்புறுதி

34. பங்குடமை ஒன்றில் இருக்கக்கூடிய பங்குதாரர்களின் எண்ணிக்கை,

1) குறைந்தபட்சம் 02, அதிகபட்சம் 20
2) குறைந்தபட்சம் 01, அதிகபட்சம் 50

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

3) குறைந்தபட்சம் 02, அதிகபட்சம் 10

4) குறைந்தபட்சம் 02, அதிகபட்சம் வரம்பில்லை

35. பங்குடமை ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கான வழிகள்

1) ஒன்று
2) இரண்டு
3) மூன்று
4) நான்கு

36. பங்குடமை ஒப்பந்தத்தை உருவாக்க முடியாத வடிவம்,

1) எழுதுதல்
2) பதிவு மூலம்
3) வாய் மொழி
4) நடத்தை மூலம்

37. பங்குடமையை ஒப்பந்தத்தை எந்த வகையில் பேணுவது சிறந்தது?

1) உட்குறிப்பு மூலம்
2) வாய்மொழியாக
3) மறைமுகமாக
4) எழுத்தில்

38. ஒப்பந்தத்தில் ஏற்படும் மாற்றங்கள், பங்காளரின் மரணம், மனநிலை பாதிப்படைதல், முறிவடைதல் போன்றவை பங்குடமை வணிகத்தை தொடர்ந்து நடாத்துவதில் தாக்கம் செலுத்துகின்றன.

1) சட்ட ஆளுமை இல்லாததால்
2) தொடர்ச்சி இல்லாததால
3) பொறுப்பு வரையறையற்றது
4) பதிவு கட்டாயமில்லை என்பதால்

39. பங்குதாரர்களின் எழுத்துப்பூர்வ ஒப்பந்தம்,

1) பங்குடமை ஒப்பந்தம்
2) பங்குடமை உறுதி
3) ஒருங்கிணைப்பு சான்றிதழ்
4) பதிவுச் சான்றிதழ்.

40. பங்குடமை ஒப்பந்தத்தில் சேர்க்கக்கூடிய விடயமாக கருதப்படாதது,

1) மூலதனத்தை எவ்வாறு வழங்குவது
2) இலாபம் மற்றும் நட்டம் பகிர்வு
3) வணிக நடவடிக்கைகளுக்கு எவ்வாறு பங்களிப்பது
4) சந்தை பகுப்பாய்வு செய்யும் முறை

41. பங்குடமை வணிகத்தின் நன்மையை உள்ளடக்கிய விடை

1) இலாபத்தைத் தனியாக அனுபவிக்கும் திறன்
2) ஒவ்வொரு பங்காளரும் மற்ற பங்காளிகளின் பிரதிநிதியாக இருக்க வேண்டும்
3) கூட்டு முடிவுகளை எடுக்கும் திறன்
4) சட்ட ஆளுமை காணப்படாமை

42. பங்குடமை வணிகத்தின் பிரதிகூலமாக கருதப்படாதது,

1) இலாபம் பங்காளர்களிடையே பகிரப்படல்
2) கூட்டாளர்களிடையே மோதல்களின் சாத்தியம்
3) அதிக மூலதனத்தை திரட்டும் திறன்
4) தொடர்ந்தியங்கும் தன்மை காணப்படாமை

43. பல முயற்சியாளர்கள் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளை தொடங்க ஆர்வமாக உள்ளனர்,

1) ஒருவர் கூட தொடங்க முடியும் என்பதால்
2) சட்டக் கட்டுப்பாடுகள் குறைவு என்பதால்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

3) பொறுப்பு வரையறையற்றது என்பதால்

4) தொடர்ந்தியங்கும் தன்மை காணப்படாததால்

44. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக அமையும் சட்டம்,

1) 1890 பங்குடமை சட்டம்
2) 2007ம் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டம்
3) 1918 ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வணிகப் பெயர் கட்டளைச் சட்டம்
4) 1995 ஆம் ஆண்டின் 15 இலக்க இலங்கை கணக்கியல் மற்றும் தணிக்கை தரநிலைகள் சட்டம்

45. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றில் இருக்கக்கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கை,
1) குறைந்தபட்சம் 02, அதிகபட்சம் 20
2) குறைந்தபட்சம் 01, அதிகபட்சம் வரம்பு இல்லை
3) குறைந்தபட்சம் 01, அதிகபட்சம் 50
4) குறைந்தபட்சம் 01, அதிகபட்சம் 20

46. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளுக்கு பொருந்தாத பண்பு,
1) பங்குகளை பொது மக்களுக்கு விற்க முடியாமை
2) பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது
3) தொடர்ந்தியங்கும் தன்மை காணப்படல்
4) சட்ட ஆளுமை காணப்படாமை

47. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் பெயரில் சொத்துக்களை வாங்குவதற்கும், அதில் ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கும் கம்பனிகளுக்கு உரிமை உண்டு.

1) சட்ட ஆளுமை காணப்படுதல்
2) பங்குதாரர்களின் பொறுப்பு வரைறுக்கப்பட்டு காணப்படுவதால்
3) தொடர்ந்தியங்கும் தன்மை காணப்படுதல்
4) கம்பனி சட்டத்தின் கீழ் பதிவு செய்ததன் காரணமாக

48. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி பதிவு செய்யும் உரிமை கொண்டவர்,

1) பிரதேச செயலாளரினால்
2) கம்பனிப் பதிவாளரினால்
3) மாவட்ட செயலாளர் மூலம்
4) நிலப் பதிவாளர் மூலம்

49. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியின் பதிவுச் சான்றிதழ்,

1) வணிக பெயர் பதிவு சான்றிதழ்.
2) ஒருங்கிணைப்பு சான்றிதழ்
3) வர்த்தக சான்றிதழ்
4) கம்பனி அகவிதி

50. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் மூலதனம் திரட்டுவது,
1) சொத்துக்களை விற்பதன் மூலம்
2) உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மூலம்.
3) பங்கு மூலதனம் மூலம்.
4) பங்காளர்களிடமிருந்து.

51. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியின் பதிவுக்காக அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களின் எண்ணிக்கை

1) ஒன்று
2) இரண்டு
3) மூன்று
4) நான்கு

52. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியை பதிவு செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணம்,
1) கிராம அலுவலர் அறிக்கை

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

2) கம்பனியின் பெயர் விபரம்
3) கம்பனி அகவிதி
4) இயக்குனர்களாக செயல்பட விருப்பம் பற்றிய அறிக்கைகள்

53. கம்பனி அகவிதி பத்திரம் என்பது,

1) கம்பனியின் இயக்குநர்கள் குழு பற்றிய தகவல்களைக் கொண்ட அறிக்கை.
2) கம்பனியின் செயலாளராக செயல்பட விருப்பம் பற்றிய அறிக்கை
3) கம்பனியின் பெயர் அறிக்கை.
4) கம்பனியின் சாதாரன நிர்வாகம் தொடர்பான தகவல்களைக் கொண்ட அறிக்கை

54. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளின் நன்மையை உள்ளடக்கிய விடையாக அமையாதது,

1) பொறுப்பு வரையறுக்கப்பட்டது
2) சட்ட ஆளுமை காணப்படல்
3) தொடர்ந்திங்கும் தன்மை காணப்படாமை.
4) ஒருவர் கூட ஆரம்பிக்க முடிதல்

55. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளில் காணப்படாத பண்பாக அமைவது,

1) கம்பனிகளின் பங்குகளை வாங்க பொதுமக்களை அழைக்கலாம்.
2) இயக்குநர்கள் குழுவின் முகாமை செய்யப்படல்
3) குறைந்தபட்சம் 01 உறுப்பினர்கள் மற்றும் அதிகபட்சம் 50 உறுப்பினர்கள்
4) சட்ட ஆளுமை காணப்படல்

56. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளின் பிரதிகூலமாக அமைவது

1) சம்பிரதாயத்தையும் உயர் அங்கீகாரத்தையும் பராமரித்தல்
2) அதிக மூலதனத்தை திரட்டுவதில் சிரமம்.
3) குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களுடன் தொடங்க முடியும்.
4) சட்ட ஆளுமை காணப்படல்

57. தனது வணிகப் பெயரின் கீழ் அதன் தயாரிப்பை விற்க மற்றொரு வணிக நிறுவனத்திற்கு அதிகாரம் அளிக்கும் அமைப்பு,

1) தனியுரிமை.
2) பங்குடமை
3) அங்கீகார வணிகம்
4) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி

58. அங்கீகார வணிகத்தில் முக்கிய பிரிவினர்கள்,

1) இரண்டு
2) மூன்று
3) நான்கு
4) ஐந்து

59. அங்கீகரிக்கப்பட்ட வணிகத்தில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களை உள்ளடக்கிய விடை,

1) பங்குதாரர் மற்றும் அங்கீகார உரிமையாளர்
2) பங்காளர் மற்றும் அங்கீகார உரிமையாளர்
3) அங்கீகாரம் வழங்குவோர் மற்றும் அங்கீகாரம் பெறுவோர்
4) அங்கீகாரம் வழங்குவோர் மற்றும் பங்குதாரர்

60. அங்கீகார வணிகம் தொடர்பான இரு தரப்பினருக்கும் இடையிலான ஒப்பந்த உறவு,

1) அங்கீகார ஒப்பந்தம்
2) பங்குடமை ஒப்பந்தம்
3) அங்கீகார பத்திரம்
4) பங்குடமை உடன்படிக்கை

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

61. அங்கீகாரம் வழங்குவோர் தனது வியாபார பெயரில் பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பதற்காக விதிக்கப்படும் கட்டணம்,

1) விற்பனை கமிஷன்
2) தனியுரிமைக் கட்டணம்
3) முகவர் கட்டணம்
4) வட்டி

62. அங்கீகாரம் வழங்கும் வணிக்திடமிருந்து அங்கீகாரம் பெறுபவர் பெறக்கூடிய நன்மையாக கருதப்படாதது,

1) அங்கீகார உரிமையாளரின் நற்பெயரிலிருந்து இலாபம் ஈட்ட முடியும்.
2) பிரபலமான சந்தைக்கு எளிதாக நுழைய முடிதல்.
3) முகாமைத்துவ பயிற்சி கிடைத்தல்.
4) முதலீடு இல்லாமல் சந்தையை விரிவுபடுத்தும் திறன்.

## (2).பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1. எந்தவொரு வணிக நிறுவனத்திற்கும் பொதுவான நான்கு பண்புகளைக் குறிப்பிடுக.
2. வணிக நிறுவனங்களை வகைப்படுத்தும் முக்கிய அளவுகோல்களைக் குறிப்பிடுக.
3. வணிகங்களை உரிமையின் அடிப்படையில் வகைப்படுத்துக.
4. தனியார் துறை வணிக நிறுவனங்களை பெயரிடுக.
5. பொதுத்துறை வணிக நிறுவனங்களுக்கு உதாரணம் தருக.
6. நோக்கங்களின்படி வணிக நிறுவனங்களை வகைப்படுத்துக.
7. இலாபம் ஈட்டும் வணிகங்களிற்கு மூன்று உதாரணங்களைக் குறிப்பிடுக.
8. சமூக நலன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட வணிகங்களிற்கு மூன்று உதாரணங்கள் கருக.
9. இலங்கையில் இலாபம் ஈட்டும் தனியார் துறை வணிகங்களின் மூன்று வகைகளைக் குறிப்பிடவும் மற்றும் ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.
10. தனி உரிமை வணிகர்களின் நான்கு அடிப்படை பண்புகளை தருக.
11. தனி உரிமை வணிகத்தை ஆரம்பிக்க விரும்பும் ஒரு முயற்சியாளருக்கு அதற்கான மூலதனத்தை திரட்டும் இரண்டு வழிகளைக் குறிப்பிடுக.
12. ஒரு தனி உரிமை வணிகத்தின் உரிமையாளரின் பொறுப்பு வரையறையற்றது என்றால் என்ன?
13. “அருணா மார்க்கெட்” அருண பெரேராவிற்கு சொந்தமான ஒரு தனியுரிமை நிறுவனமாகும். அருணா ஸ்டோர் மீது வாடிக்கையாளர் ஒருவர் வழக்கு தொடர்ந்துள்ளார். ஒரு தனி உரிமை வணிகத்தின் அடிப்படை அம்சங்களுடன் தொடர்புடைய மேற்கண்ட சூழ்நிலையை விளக்குக.
.
14. பங்குடைமையை முடிக்கும் போது, வெளி தரப்பினரிடம் இருந்து பெற்ற கடனை திருப்பி செலுத்த பங்குடைமையிடம் போதிய நிதி இல்லை. பங்குடைமையின் பொறுப்பு வரையறைக்குள் இந்த சம்பவத்தை விளக்குக.
15. ஒரு தனி உரிமை வணிகத்தைப் பதிவு செய்யத் தேவையான ஆவணங்கள் என்ன?
16. ஒரு தனி உரிமை வணிகத்தைப் பதிவு செய்வதற்கான அதிகாரம் உள்ள நபர் ?
17. ஒரு முயற்சியாளருக்கு ஒரு தனி உரிமையை தொடங்குவதன் மூலம் கிடைக்கக் கூடிய 4 நன்மைகளைக் குறிப்பிடுக.
18. தனி உரிமை வணிகத்தின் 4 பிரகூலங்களைக் குறிப்பிடுக.
19. பங்குடமையில் காணக்கூடிய நான்கு பண்புகளைக் குறிப்பிடுக.
20. பங்குடமை ஒப்பந்தத்தை ஏற்படுத்தக் கூடிய சாத்தியமான வழிகளைக் குறிப்படுக.
21. பங்குடமை ஒப்பந்தத்தை எழுத்துப்பூர்வமாக பேணுவதன் முக்கியத்துவத்தை் தருக.
22. பங்குடமை உடன்படிக்கை என்றால் என்ன?
23. பங்குடமை ஒப்பந்தத்தில் உள்ள 4 பண்புகளைக் குறிப்பிடுக.
24. பங்குடமையை தொடங்கி நடாத்துவதன் இரண்டு நன்மைகளைக் குறிப்பிடுக.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

25. பங்குடமையின் வரையறைகளைத் தருக.
26. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் நான்கு அடிப்படை பண்புகளை எழுதுக.
27. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியின் சாதாரண நிர்வாகம் தொடர்பான தகவல்களைக் கொண்ட ஆவணம் என்ன?
28. கம்பனி அகவிதியில் உள்ள இரண்டு தகவல்களைக் குறிப்பிடுக.
29. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியை பதிவு செய்யும் போது விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் எவை?
30. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியினை பதிவு செய்யும் அதிகாரம் உடைய நபர் யார்?
31. கூட்டிணைப்புச் சான்றிதழ் என்றால் என்ன?
32. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியின் 4 பண்புகளை குறிப்பிடுக.
33. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளை தொடங்குவதன் மூலம் முயற்சியாளருக்கு கிடைக்கக்கூடிய இரண்டு நன்மைகளைக் குறிப்பிடுக.
34. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளில் காணக்கூடிய குறைபாடுகளை சுட்டிக்காட்டுக.
35. அங்கீகார வணிகங்கள் காணப்படக்கூடிய பல்வேறு வடிவங்களைக் குறிப்பிடுக.
36. அங்கீகார வணிகத்தில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களைக் குறிப்பிடுக.
37. அங்கீகார வணிகத்தைத் தொடங்குவது மற்றும் பராமரிப்பது குறித்த ஒருமித்த கருத்தைக் கொண்ட ஆவணம் என்ன?
38. அங்கீகார ஒப்பந்தத்தில் உள்ள பிரிவினர்களைக் குறிப்பிடுக.
39. அங்கீகார பெறுநரால் அங்கீகார உரிமையாளருக்குச் செலுத்தப்படும் கட்டணம் யாது?
40. அங்கீகார ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட இரண்டு பொதுவான ஒப்பந்தங்களைக் குறிப்பிடுக.
41. அங்கீகார வணிகங்களில் காணக்கூடிய இரண்டு அடிப்படை அம்சங்களை குறிப்பிடுக.
42. அங்கீகார வழங்குனர் மற்றும் அங்கீகார பெறுநர் முறையே அங்கீகார வணிகத்தில் ஈடுபடுவதன் மூலம் பெறக்கூடிய நன்மைகளைக் குறிப்பிடுக.
43. அங்கீகார வணிகத்தின் இரண்டு பிரதிகூலங்களைக் குறிப்பிடுக.

44. லஹிரு தான் சேமித்த பணம் மற்றும் நிலத்தை விற்று பெற்ற பணத்தில் அலங்கார மீன் வளர்ப்பு மையத்தை தொடங்கினார். உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும், லஹிரு விரைவில் அப்பகுதியில் மிகவும் பிரபலமான செல்ல மீன் வியாபாரிகளில் ஒருவரானார். அவர் தனது வணிகத்திற்கு ”லஹிரு அக்கூவாரியம்” என்று பெயரிட்டார் மற்றும் வணிகத்தை பதிவு செய்ய விரும்புகிறார்.

    பல ஊழியர்களை வேலைக்கு அமர்த்தி தொழிலை விரிவுபடுத்தினார், அதற்கான மூலதனத்தை திரட்ட வழி தேடினார். அவனது நண்பர்கள் இருவர் அவனது தொழிலில் சேரத் தயாராக இருந்தாலும், அவர்களுடன் கருத்து முரண்பாடுகள் ஏற்படுமோ என பயப்படுகின்றான்.

    மேலே உள்ள சம்பவத்தைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

    I. லஹிருவால் ஆரம்பிக்கப்பட்ட வணிகம் எந்த வணிக நிறுவனத்தைச் சேர்ந்தது?
    II. அவர் வணிகத்திற்கான மூலதனத்தை எவ்வாறு திரட்டினார் என்பதைக் குறிப்பிடவும்.
    III. லஹிருவின் வியாபாரத்தை பதிவு செய்வது குறித்து நீங்கள் என்ன ஆலோசனை கூறுவீர்கள்?
    IV. லஹிரு தனது நண்பர்களை வியாபாரத்திற்காக தொடர்பு கொண்டால், தற்போதுள்ள வணிகம் எவ்வாறான வணிக அமைப்பாக மாற்றமடையும்?
    V. மோதல் அல்லது சர்ச்சை இல்லாமல் ஒரு புதிய வணிக நிறுவனத்தை எவ்வாறு நடாத்த முடியும்?
45. சேனானி சேனாரத்ன மற்றும் ஜெயனி ஜயரத்ன ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட தின்பண்ட வியாபாரம் “ஸ்வீட் / பூட்“ என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டது. அவர்கள் செய்து கொண்ட பங்குடமை ஒப்பந்தம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியது.

    .

    - இருவரும் ரூ. தலா 100 000 மூலதனமாகப் ஈடுபடுத்த வேண்டும்.
    - இலாப நஷ்டம் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

- வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் ஜெயனிக்கு ரூ. 25000 சம்பளம் வழங்க வேண்டும்.
- பங்காளர்களினால் மூலதனத்திற்கு மேலதிகமாக வணிகத்திற்கு வழங்கப்படும் கடன்களுக்கு 10% வருடாந்த வட்டி செலுத்த வேண்டும்.
- மூலதனத்தின் மீது 10% வருடாந்த வட்டி வழங்கப்படும்.
- புதிய பங்காளரை பணியமர்த்தினால், இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

மேலும் ஸ்வீட் /பூட்ஸ் என்ற பெயரில் வாடிக்கையாளர் ஒருவர் தங்கள் தயாரிப்புகளுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட சம்பவத்தின் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

I. பங்குடமை ஒப்பந்தத்தின் சாத்தியமான வடிவங்கள் யாவை?
II. மேலே உள்ள தகவலின் அடிப்படையில் பங்குடமை உடன்படிக்கையை தயாரிக்க.
III. பங்குடமையின் அடிப்படை அம்சங்களின் அடிப்படையில் நுகர்வோர் வழக்கு தொடர்பான உங்கள் கருத்துக்ளைக் குறிப்பிடுக.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH